1981 மார்ச் 27]

கொள்ளவில்லை என்று சொன்னார்கள். ஆனால் திருப்பூருக்கு மேட்டுப்பாளையத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரப்பட்டு, அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சிறுவாணித் திட்டத்தின் மூலமாக கோவைக்குக் கொடுக்கும் தண்ணீரை 'ஆக்மென்ட்' செய்வது என்பது வேறொரு திட்டம். ஆனால் இந்தப் பிரச்சனையிலே பவானி ஆற்றிலிருந்து கோவைக்கு தண்ணீர் கொண்டுவரும் முடிவு நிலைக்குமா அல்லது ரத்தாகிவிடுமா? எப்போது நிறைவேற்றப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, நான் எந்த நேரத்திலும் நெல்லித்துறைத் திட்டம் ரத்தாகி விட்டது என்று சொல்லவில்லை. வேண்டுமானால் படித்துப் பார்க்கலாம். கோவை நகருக்கு நெல்லித்துறை பகுதியில் இருந்து குடிநீர் கொண்டுவர திட்டம் ஏதேனும் உண்டா என்பது கேள்வி. அதற்கு என்னுடைய பதில் 'இல்லை'. என்பது ஆகும். கேட்டதற்குத்தான் பதில் சொல்ல வேண்டும்; கேட்காததற்குப் பதில் சொல்லக் கூடாது.

தென்னக ஆறுகளை ஒன்றிணைக்கும் திட்டம்

*வினா எண். 516—திரு. இ. முத்துராமலிங்கம் திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா:

(அ) தென்னக ஆறுகளை ஒன்றிணைக்கும் திட்டம் தொடர்பாக மத்திய அரசு தமிழக அரசிடம் ஆலோசனை செய்ததா?

(ஆ) எந்தெந்த ஆறுகளை எவ்வாறு ஒருங்கிணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) 1980ஆம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய அரசு மாநில அதிகாரிகள் மட்டத்தில் நடத்திய கூட்டத்தில் இந்தியாவில் வட மாநிலங்களில் ஓடும் பெரிய நதிகளை இணைப்பது பற்றியும் மற்றும் தென்மண்டலத்தில் ஓடும் பெரிய நதிகளை இணைப்பது பற்றியும் திட்டம் தயாரிப்பது பற்றி பேசப்பட்டது. இதுபற்றிய ஒரு விரிவான திட்டம் தயாரிக்கும் நோக்கத்துடன் இந்திய அரசு, நதிகளில் கிடைக்கும் உபரி நீர் பற்றியும் மற்றும் தேவையான புள்ளி விவரங்களையும் சேகரித்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, கூட்டம் நடந்ததாகவும், அதிலே வட மாநில ஆறுகளையும், தென்மாநில ஆறுகளையும் இணைப்பது பற்றி பேசப்பட்டதாகவும் சொன்னார்கள். எந்த எந்த ஆறுகளில் உபரி நீர் இருப்பதாகச் சொன்னார்கள்? குறிப்பாக தென் மண்டலத்தில் எந்த எந்த ஆறுகளில் தண்ணீர் உபரி இருக்கிறது என்று பரிசீலிக்கப்பட்டதா? தமிழ்நாட்டில் எந்த எந்த ஆறுகளிலிருந்து பெறு

வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று பரிசீலிக்கப்பட்டதா? அதன் அடிப்படையில் நமக்கு கூடுதலாகக் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜ முகமது : தலைவரவர்களே, இப்போதுதான் புள்ளி விவரங்கள் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு வேலை முடிந்த பிறகுதான் இதற்குப் பதில் சொல்ல முடியும்.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, மேற்கு மலைத் தொடரில் உற்பத்தியாகி, அரபிக் கடலிலே கலந்து வீணாகும் தண்ணீரை தமிழகத்திற்குக் கொண்டு வர தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடந்ததா? அண்மையில் மத்திய அரசு குழு ஆராய்ந்து ஒரு கணிசமான பகுதி தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைக்கும் என்று சொல்லியிருப்பதாக அறிகிறேன். அது பற்றிய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மூலக் கேள்வி ஒட்டு மொத்தமாக தென் மண்டல ஆறுகளைப் பற்றியது.

மனிமுத்தா அணைக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டம்

*வினா எண் 517—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) சாத்தனூர் அணையின் வலது பக்கக் கால்வாய் மூலம் மணிமுத்தா அணைக்கு சாத்தனூர் அணை நீரை கொண்டு செல்ல திட்டம் உண்டா?

(ஆ) மணிமுத்தா அணையினால் பாதிக்கப்பட்ட மேமாத்தூர், விருத்தாசலம் அணைகளுக்கு அந்த நீர் கொடுக்கப்படுமா?

மாணபுமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம்.

(ஆ) மணிமுத்தா அணையினால் அதன் கீழ் உள்ள மேமாத்தூர், விருத்தாசலம் அணைகள் பாதிக்கப்படவில்லை. மணிமுத்தா அணை, அதன் கீழ் உள்ள பழைய ஆயக்கட்டின் பாசன உரிமை பாதிக்கப்படாவண்ணமே திட்டமிடப்பட்டுக்கட்டப்பட்டுள்ளது.

திரு. ஆர். தியாகராசன் : தலைவரவர்களே, அந்தப் பகுதி பாதிக்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் மூன்று அணைகள் அந்தப் பகுதியிலே கட்டிமுடிக்கப்பட்டு விட்ட காரணத்தால் கீழே உள்ள ஆயக்கட்டுதாரர்களுக்கு இதுவரை தண்ணீர் வரவில்லை. உபரித்